


புதுகை
# வரலாறு
நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




சனி ❖ பிப்ரவரி. 26, 2022 | சென்னை & புதுக்கோட்டை | 4 பக்கம் ❖ வரலாறு 7 ❖ இதழ் 142 ❖ ரூ.5

## உக்ரைன் உடன் பேச்சுவார்த்தைக்கு தயார் : ரஷ்யா திடீர் அறிவிப்பு

# ஆறுதல்

## பெரிய நகரங்களில் வெடிச்சத்தங்களும் துப்பாக்கிச் சூடு சத்தமும் அலற சுமார் 1 லட்சம் பேர் வீடு வாசலை விட்டு வெளியேறி விட்டனர்

**கீவ்,பிப். 26:**

**உக்ரைன் ராணுவம் தாக்குதலை நிறுத்தினால் பேச்சுவார்த்தை நடத்த தயாராக உள்ளோம் என ரஷ்ய வெளியுறவுத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.**



உக்ரைனில் திடீர் தாக்குதல் நடத்தி உலக நாடுகளுக்கு ரஷ்யா அதிர்ச்சி கொடுத்துள்ளது. நேற்றிலிருந்து ரஷ்ய ராணுவம் உக்ரைன் மீதான தாக்குதலை தொடங்கியிருக்கிறது. போர் என்று கூறும் அளவுக்கு மிகப்பெரிய அளவிலான தாக்குதல்கள் இன்னும் தொடுக்கப்படவில்லை. உக்ரைனில் பல்வேறு வெளிநாடுகளைச் சேர்ந்தவர்களும் இருப்பதால் உலகநாடுகள், இந்த விவகாரத்தை கவனமாக கையாண்டு வருகின்றன.

அமெரிக்கா, பிரான்ஸ், இங்கிலாந்து உள்ளிட்டவைகளை உறுப்பு நாடாக கொண்டுள்ள நேட்டோ அமைப்புடன் உக்ரைன் சேர முயற்சி மேற்கொண்டுள்ளது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்துதான் ரஷ்யா தாக்குதல் நடத்த தொடங்கியுள்ளது. இதனால், ரஷ்யாவை எதிர்த்துநேட்டோ நாடுகள் தாக்குதல் நடத்துமா என்ற கேள்வி சர்வதேச அரசியல் பார்வையாளர்கள் மத்தியில் எழுந்துள்ளது. பெரிய நகரங்களில் வெடிச்சத்தங்களும் துப்பாக்கிச் சூடு சத்தமும் அலற சுமார் 1 லட்சம் பேர் வீடு வாசலை விட்டு வெளியேறி விட்டனர்.

சுமார் 22 ஆயிரத்திற்கும் அதிகமான இந்தியர்கள் உக்ரைனில் இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. அவர்கள் அனைவரும் தலைநகர் கீவில் உள்ள இந்திய தூதரகத்தை தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். தற்போது விமானப் போக்குவரத்து முடக்கப்பட்டிருப்பதால் விமானப்படை விமானங்களை பயன்படுத்திமீட்புபணியை மேற்கொள்ளலாமா என்ற ஆலோசனையில் மத்திய அரசு உள்ளது.

இதனிடையே, ரஷ்யப் படைகள் உக்ரைனுக்குள் ஊடுருவியதை அடுத்து தலைநகர் கீவுக்குள்ளும் படைகள் நுழையும் நிலையில் உள்ளன. இதனையடுத்து செய்வதறியாது கையைப் பிசையும் உக்ரைன் அதிபர் செலென்ஸ்கி உலக நாடுகள் உடனடியாக ஏதாவது செய்யுங்கள் என்று மன்றாடிக்கேட்டுக் கொண்டுள்ளார்.

தலைநகர் கீவின் மேல் வான்தாக்குதல்சைரன்கள் அலறிய வண்ணம் இருப்பதாக ராய்ட்டர்ஸ் செய்திகள் கூறுகின்றன. அதிகாரப்பூர்வமற்ற தகவல்களின்படி ரஷ்ய விமானம் ஒன்று சுட்டுவீழ்த்தப்பட்டு கட்டிடம் ஒன்றினுள் புகுந்ததாக கூறப்படுகிறது. தலைநகரின் சுற்றுப்புறப்பகுதியில் ரஷ்யப் படைகள் ஊடுருவியுள்ளன, அடுத்து தலைநகருக்குள்ளும் ஊடுருவும் என்ற அச்சம் எழுந்துள்ளது.

பெரிய நகரங்களில் வெடிச்சத்தங்களும் துப்பாக்கிச் சூடு சத்தமும் அலற சுமார் 1 லட்சம் பேர் வீடு வாசலை விட்டு வெளியேறி விட்டனர். 12 பேர் கொல்லப்பட்டிருக்கலாம் என்றும் அஞ்சப்படுகிறது. செர்னோபில் அணு நிலையத்தை ரஷ்யப் படைகள் கைப்பற்றி விட்டன. அமெரிக்காவின் கைப்பாவையாக இருப்பதாக புதின் கருதும் உக்ரைனைக் கைப்பற்றி அரசாங்கத்தை கவிழ்ப்பதை ரஷ்யா நோக்கமாகக் கொண்டுள்ளது என்று அமெரிக்க மற்றும் உக்ரேனிய அதிகாரிகள் கூறுகின்றனர். இந்நிலையில், உக்ரைன் ராணுவம் தாக்குதலை நிறுத்தினால் பேச்சுவார்த்தை நடத்த தயாராக உள்ளோம் என ரஷ்ய வெளியுறவுத்துறை அமைச்சர் செர்ஜி லாவ்ரோவ் தெரிவித்துள்ளார்.

## இந்தியாவின் வேலைவாய்ப்புத் துறையின் முதுகெலும்பை பிரதமர் மோடி உடைத்துள்ளனர் ராகுல் குற்றச்சாட்டு

**அமேதி ,பிப். 26:**

இந்தியாவின் வேலைவாய்ப்புத் துறையின் முதுகெலும்பை பிரதமர் நரேந்திர மோடி மற்றும் அவரது நண்பர்களால் உடைத்துள்ளனர் என காங்கிரஸ் எம்.பி., ராகுல் தெரிவித்துள்ளார்.



உ.பி., மாநிலம் அமேதியில் உள்ள ஜகதீஷ்பூரில் காங்கிரஸ் சார்பில் பிரசார பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதில், காங்கிரஸ் எம்.பி., ராகுல், பொதுச்செயலர் பிரியங்கா உள்ளிட்டோர் பங்கேற்றனர். அப்போது பிரியங்கா பேசுகையில்: பிரதமர் மோடி, 5 ஆண்டுகளாக என்ன செய்து கொண்டிருந்தார்? உக்ரைனில் நடந்த போரைப் பற்றி தெரிந்த அவருக்கு, இந்த விவசாயிகளின் பிரச்னை தெரியவில்லையா? உங்கள் (மக்கள்) சூழ்நிலைகளுக்கு நீங்களே பொறுப்பு. நீங்கள் கண்களை மூடிக்கொண்டு ஓட்டளியுங்கள். உங்கள் ஓட்டு மிகப் பெரிய பொறுப்பு, அடுத்த 5 ஆண்டுகளுக்கு நீங்கள் வருந்தக்கூடும் என்பதால் புத்திசாலித்தனமாகத் தேர்ந்தெடுங்கள். இது உங்களின் வளர்ச்சிக்கான நேரம் என பேசினார்.

ராகுல் காந்தி பேசுகையில்: காங்கிரஸ் ஆட்சி 70 ஆண்டுகளாக எதுவும் செய்யவில்லை என பா.ஜ.,வினர் கூறுகின்றனர். இந்தியாவின் மிகப்பெரிய கோடீஸ்வரர்கள் எந்தவொரு வேலைவாய்ப்பையும் கொடுக்கவில்லை.மாறாக, சிறு கடைக்காரர்கள், வியாபாரிகள் மற்றும் விவசாயிகள் தான் வேலைவாய்ப்பு அளிக்கின்றனர் என்பதை நினைவில் கொள்ளுங்கள். இந்தியாவின் வேலைவாய்ப்புத் துறையின் முதுகெலும்பை பிரதமர் நரேந்திர மோடி மற்றும் அவரது நண்பர்களால் உடைத்துள்ளனர். இனிவரும் காலங்களில் இந்த நாட்டின் இளைஞர்களுக்கு வேலை கிடைக்காது என்பதை நீங்கள் பார்ப்பீர்கள். கோவிட் சமயத்தில் நான் சொல்வதை யாரும் கேட்கவில்லை, ஆனால் கங்கையில் உடல்கள் மிதந்ததை மக்கள் பார்த்தனர். இவ்வாறு அவர் பேசினார்.

### தேசிய பங்குச்சந்தை முறைகேடு

## ஆனந்த் சுப்பிரமணியனுக்கு மார்ச் 6-ம் தேதி வரை சிபிஐ காவல்

**சென்னை ,பிப். 26:**

தேசிய பங்குச்சந்தையில் முறைகேடு தொடர்பாக வழக்குப்பதிவு செய்து சி.பி.ஐ. அதிகாரிகள் பல்வேறு ஆதாரங்களை திரட்டியுள்ளனர்.

தேசிய பங்கு சந்தையில் தலைமை நிர்வாக அதிகாரியாக பணியாற்றிய சித்ரா ராமகிருஷ்ணனின் சென்னையில் உள்ள வீட்டில் சோதனை நடைபெற்றது.

பங்குச்சந்தை முறைகேடு தொடர்பாக செபி அதிகாரிகள் விசாரணை நடத்தினர். இதில் சித்ரா ராமகிருஷ்ணன் பணிபுரிந்த காலத்தில் என்னென்ன விஷயங்கள் நடந்துள்ளன என்பது குறித்து முழுமையாக விசாரணை நடத்தப்பட்டது.

அப்போது இமயமலையில் உள்ள முகம் தெரியாத சாமியார் ஒருவரின் ஆலோசனைப்படி சென்னையைச் சேர்ந்த ஆனந்த் சுப்பிரமணியன் என்பவரை செயலாக்க அதிகாரியாகவும், ஆலோசகராகவும் சித்ரா ராமகிருஷ்ணன் நியமித்தது கண்டுபிடிக்கப்பட்டது.

முக்கியத்துவம் வாய்ந்த இந்த பதவிக்கு முறைப்படி விளம்பரங்கள் செய்து விதிமுறைகளை கடைப்பிடிக்காமல் சித்ரா ராமகிருஷ்ணன், ஆனந்த் சுப்பிரமணியத்தை பதவியில் அமர்த்தி உள்ளார். இந்த நியமனத்திலும் முறைகேடு நடந்தது விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இதனைத் தொடர்ந்து மும்பை சி.பி.ஐ. அதிகாரிகள் இது தொடர்பாக வழக்குப்பதிவு செய்தனர். பங்கு சந்தை முறைகேடு குறித்து பல்வேறு ஆதாரங்களை திரட்டினர்.

இதையடுத்து சி.பி.ஐ. அதிகாரிகள் சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள ஆனந்த் சுப்பிரமணியத்தின் வீட்டுக்கு கடந்த 2 நாட்களுக்கு முன்பு வந்தனர். அவரிடம் விசாரணை நடத்தி பல்வேறு தகவல்களை சேகரித்தனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு அதிரடியாக அவர் கைது செய்யப்பட்டார். சென்னையில் இருந்து உடனடியாக ஆனந்த் சுப்பிரமணியத்தை மும்பைக்கு அழைத்து சென்றனர்.

இந்நிலையில், ஆனந்த் சுப்பிரமணியனுக்கு மார்ச் 6-ம் தேதி வரை சிபிஐ காவலில் வைக்க டெல்லி சிபிஐ சிறப்பு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## தேசிய அறிவியல் தினத்தையொட்டி அறிவியல் கண்காட்சியில் முன்னாள் துணைவேந்தர் பங்கேற்றார்





**காரைக்குடி ,பிப். 26:**

பிப்ரவரி மாதம் 28 ஆம் தேதி, தேசிய அறிவியல் தினத்தை முன்னிட்டுத் தேவதைகள் கூட்டத்தின் இந்த மாதச் சந்திப்பு அறிவியல் கண்காட்சியாக காரைக்குடியில் நடத்தப்பட்டது.

27 மாணவர்கள் ஆர்வமாகக்கலந்து கொண்டார்கள். அவர்களுடைய அறிவியல் மனப்பான்மையை வளர்ப்பதற்கும், உள்ளார்ந்த திறமைகளைக் காட்டுவதற்கும் மிகச்சிறந்த வாய்ப்பாக இதனைப் பயன்படுத்திக் கொண்டு சிறந்த மாதிரிகளைச்செய்து கொண்டு வந்திருந்தனர். எளிய அறிவியல் சோதனைகளைச் செய்து காட்டினர். அழகப்பா பல்கலைக்கழகத்தின் மேனாள் துணைவேந்தர் பேராசிரியர் சுப்பையா சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு குழந்தைகளுக்குச் சான்றிதழ்களும் பரிசுகளும் வழங்கினார். பரிசுக்கான நூல்களை இனிய நந்தவனம் மாத இதழின் ஆசிரியர் கவிஞர் நந்தவனம் சந்திரசேகரன் அன்பளிப்பாக வழங்கினார்.

முன்னதாக, தேவதைகள் கூட்டத்தின் நிறுவனர் பா.தென்றல், எல்கேஜி முதல் ஒன்பதாம் வகுப்பு வரையான பல்வேறு பள்ளிகளைச் சேர்ந்த குழந்தைகளை நெறிப்படுத்தி அறிவியல் கண்காட்சியை அமைத்திருந்தார்.

பேராசிரியர் சுப்பையா பேசும் போது, "குழந்தைகளைப் படைப்பாளிகளாக நேரடியாகப் பார்க்கிற ஒரு வாய்ப்பு எனக்கு இன்று கிடைத்திருக்கிறது. குழந்தைகளைக் கொண்டாட வேண்டும் என்று சொல்வார்கள். அவர்கள் மகிழ்ச்சியாக இருப்பதை இங்கு பார்க்கிறேன். மாணவர்களால் சாதிக்கமுடியும், புதிய கண்டுபிடிப்புகள் கண்டுபிடிக்க முடியும் என்றால், அவர்களுக்கு வாய்ப்புகள் கொடுக்கப்பட வேண்டும்.

இதுபோன்ற அறிவியல் கண்காட்சிகள் நடத்துவதன் மூலமே மாணவர்கள் என்ன கண்டுபிடிக்க முடியும் என்பதைத் தெரிந்து கொள்ளலாம். குழந்தைகளுடைய சிந்தனையைத் தூண்டுகிற அளவிற்கும், அவர்களின் அறிவை வளர்க்கிற அளவிற்கும் ஆசிரியர் தாமாக சென்று, வலியச் சென்று மாணவர்களை ஊக்குவிக்கின்ற ஒன்றை இங்குதான் பார்க்கிறேன். இந்த அமைப்பை ஒரு முன்மாதிரியான திட்டம் என்றே சொல்வேன்.

இதுநிறையஇடத்திற்குப் பரவ வேண்டும். நிறைய மாணவர்கள் இதில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். மாணவப் பருவத்தில் இது போன்ற ஆர்வத்தை உருவாக்குவதால் தான் சிறந்த படைப்பாளிகள் உருவாகிறார்கள். சிந்திக்கவும் செயல்படவும் இப்படி வாய்ப்புக் கிடைத்தவர்கள் இன்று பெரிய ஆளுமைகளாக இருக்கின்றனர். பல படைப்பாளிகளை, பல அறிஞர்களை, பல அறிவியல் வல்லுனர்களை உருவாக்கக்கூடிய ஒரு சிறந்த வாய்ப்பாக இந்த அறிவியல் கண்காட்சி நடக்கிறது"என்று கூறினார்.

மேலும் ஒவ்வொரு மாணவரிடமும் சென்று அவர்கள் செய்துகொண்டிருந்தவற்றை வினாக்கள் மூலம் கேட்டுத் தெரிந்து கொண்டும், செய்து காட்டியதை உற்றுநோக்கிக் கேள்விகள் கேட்டும் அவர்களைப் பாராட்டி ஊக்கமூட்டினார்.

## செல்லூர் ராஜூவின் சர்ச்சை பேச்சு.. 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' – சசிகலா சூசகம்

**சென்னை ,பிப். 26:**

அதிமுகவில் தலைமையே கிடையாது என்று முன்னாள் அமைச்சர் செல்லூர் ராஜு தெரிவித்துள்ளார். ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்பதை உணர்ந்து அனைவரும் ஒருங்கிணைந்து செயல்படவேண்டும் என வி.கே. சசிகலா அழைப்பு விடுத்துள்ளார்.



மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் 74-வது பிறந்தநாளையொட்டி மதுரை கே.கே. நகரில் உள்ள எம்.ஜி.ஆர் மற்றும் ஜெயலலிதா சிலைகளுக்கு முன்னாள் அமைச்சர் செல்லூர் ராஜூ மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், அதிமுகவில் தலைமையே கிடையாது என்றும் ஜெயலலிதா இருந்தபோது நடைபெற்ற தேர்தலில் அதிமுகவுக்கு கிடைத்த வெற்றியை தற்போது எதிர்பார்க்க முடியாது என்றும் தெரிவித்தார்.

சென்னை ராமாபுரம் எம்.ஜி.ஆர். தோட்டத்தில் நடைபெற்ற ஜெயலலிதா பிறந்தநாள் விழாவில் பேசிய வி.கே சசிகலா, 50 ஆண்டு கால வரலாற்றில் அதிமுக தொடர் தோல்வியை கண்டதில்லை என்றும் இதை மனதில் எண்ணி பார்த்து நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட உறுதி ஏற்போம் என்றும் தெரிவித்தார்.

ஜெயலலிதா பிறந்தநாளையொட்டி சென்னை ராயப்பேட்டையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அமமுக பொதுசெயலாளர் தினகரன், திமுகவை வீழ்த்துவதற்காக தான் பல்வேறு தியாகங்களை செய்ததாகவும் அதை அதிமுகவினர் புரிந்து கொள்ளவில்லை என்றும் ஆதங்கம் தெரிவித்தார்.

சென்னையில் ஜெயலலிதா சிலைக்கு மாலை அணிவித்த பிறகு செய்தியாளர்களிடம் பேசிய முன்னாள் அதிமுக நிர்வாகி புகழேந்தி, ஓபிஎஸ், ஈபிஎஸ் அதிமுகவில் இருந்து விலகினால் தான் கட்சியை காப்பாற்ற முடியும் என காட்டமாகத் தெரிவித்தார்.

## சிதம்பரம் அருகே அரசு பள்ளியில் முட்டை சாப்பிட்ட 25 மாணவர்களுக்கு வாந்தி, மயக்கம்... போலீசார் தீவிர விசாரணை

**சிதம்பரம் ,பிப். 26:**

சிதம்பரம் அருகே அத்தியாநல்லூர் கிராமத்தில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி இயங்கி வருகிறது. இந்த பள்ளியில் சுமார் 60-க்கும் மேற்பட்ட குழந்தைகள் ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம்வகுப்புவரை கல்வி பயின்று வருகின்றனர். இந்நிலையில் நேற்று மதியம் உணவு சாப்பிட்ட 20க்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கு திடீர் வாந்தி மயக்கம் ஏற்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து அருகிலிருந்தவர்கள் மற்றும் பெற்றோர்கள் அவர்களை மீட்டு சிதம்பரம்ராஜா முத்தையா அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்துள்ளனர்.

இதையடுத்து மாணவர்களுக்கு அங்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வரும் சூழ்நிலையில் பள்ளி மாணவர்கள் மயக்கம் அடைந்தது குறித்து புதுச்சத்திரம் போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர் . போலீசார் நடத்திய முதற்கட்ட விசாரணையில் அவர்கள் மதிய உணவு சாப்பிடும் பொழுது அவர்களுக்கு அளித்த முட்டை காலாவதியாகி அழுகிப் போய் உள்ளதாக தெரியவந்துள்ளது.

இது குறித்து சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் நேரில் சென்று தற்போது விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். பாதிக்கப்பட்ட மாணவர்கள் அனைவரும் சிதம்பரம் ராஜா முத்தையா அரசு மத்தியில் தற்போது சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்







தங்கமான தெரு - நெல்லுமண்டி தெரு
ஸ்ரீ புவனேஸ்வரி ஜுவல்லர்ஸ்
தங்கம் | வெள்ளி | வைரம் | பரிசுப்பொருட்கள்
3179, நெல்லுமண்டி தெரு, புதுக்கோட்டை - 622 001. போன் : 04322 222504, 222 505

| தங்கம் | கிராம் | 22 கேரட் தங்கம் | 24 கேரட் தங்கம் |
|---|---|---|---|
| விலை | 1 கிராம் | Rs.4,809 | Rs.5,175 |

## வரலாற்றில் இன்று



1876 யப்பானியக் குடிமக்களுக்கு கொரியாவில் யப்பானிய வணிக வசதிகளுக்காக மூன்று துறைமுகங்களை அமைக்க, யப்பானுக்கும் கொரியாவுக்கும் இடையில் உடன்பாடு எட்டப்பட்டது.

1909 கினிமாக்கலர் என்ற முதலாவது வெற்றிகரமான வண்ண அசையும் திரைப்பட அமைப்பு முறை இலண்டனில் அரண்மனை அரங்கில் பொதுமக்களுக்குக் காண்பிக்கப்பட்டது.

1935 இராபர்ட் வாட்சன்-வாட் என்பவர் இங்கிலாந்தில் நடத்திய பரிசோதனை ஐக்கிய இராச்சியத்தில் ரேடாரை உருவாக்க வழிசமைத்தது.

1936 சப்பான் அரசைக் கவிழ்க்க நடத்தப்பட்ட இராணுவப் புரட்சி தோல்வியில் முடிந்தது.

1952 ஐக்கிய இராச்சியப் பிரதமர் வின்ஸ்டன் சர்ச்சில் தனது நாட்டிடம் அணுகுண்டு உள்ளதாக அறிவித்தார்.

1960 நியூயார்க் சென்று கொண்டிருந்த விமானம் அயர்லாந்தில் இடுகாடு ஒன்றின் மீது வீழ்ந்ததில் அதில் பயணம் செய்த 52 பேரில் 34 பேர் உயிரிழந்தனர்.

1971 ஐநா பொதுச் செயலர் ஊ தாண்ட் இளவேனிற் புள்ளியை புவி நாளாக அறிவித்தார்.

1980 எகிப்தும் இசுரேலும் முழுமையான தூதரக உறவை ஏற்படுத்தின.

1984 பெய்ரூட்டில் இருந்து ஐக்கிய அமெரிக்கப் படைகள் வெளியேறின.

1991 வளைகுடாப் போர்: குவைத்தில் இருந்து ஈராக்கியப் படைகள் வெளியேறுவதாக அதிபர் சதாம் உசேன் அறிவித்தார்.

1992 நகோர்னோ-கரபாக் போர்: ஆர்மீனிய இராணுவத்தினர் அசர்பைசானிய மக்கள் மீது தாக்குதல் நடத்தியதில் நூற்றுக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர்.

1993 நியூயோர்க் நகரில் உலக வர்த்தக மையத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 6 பேர் கொல்லப்பட்டு ஆயிரத்துக்கும் அதிகமானோர் காயமடைந்தனர்.

2001 ஆப்கானித்தானில் தலிபான் அரசு மிகப்பழமையான இரண்டு புத்தர் சிலைகளை அழித்தது.

2013 வெப்பக் காற்று ஊதுபை ஒன்று எகிப்தில் வீழ்ந்து வெடித்ததில் 19 பேர் உயிரிழந்தனர்.

# உக்ரைனுக்கு உடனடி நிதியுதவி வழங்க உலக வங்கி முடிவு

வாஷிங்டன், பிப். 26-

ரஷ்யாவின் தாக்குதலால் சிக்கி தவிக்கும் உக்ரைனுக்கு உடனடியாக நிதியுதவி வழங்க தயாராக இருப்பதாக உலக வங்கி தெரிவித்துள்ளது.

உக்ரைன் மீது ரஷ்யா தொடர்ந்து 3வது நாளாக போர்தொடுத்து வருகிறது. உக்ரைன் தலைநகர் கீவ்விற்குள் ரஷ்யபடைகள் நுழைந்துள்ளனர். இதனையடுத்து அங்கு பதற்ற நிலை நீடிக்கிறது. இந்த நிலையில், உக்ரைனுக்கு உடனடியாக நிதியுதவி வழங்க தயாராக இருப்பதாக உலக வங்கி அறிவித்துள்ளது. உலக வங்கி தரப்பில், உக்ரைனுக்கு நிதியுதவி உள்ளிட்ட தேவைகள் குறித்து ஆலோசித்து வருவதாகவும் விரைவில் நிதி மற்றும் தொழில்நுட்ப ஆதரவுகளை வழங்கும் என்றும்' தெரிவித்துள்ளது.

உலகவங்கி குழுமத்தின் தலைவர் டேவிட் மல்பாஸ் கூறுகையில், உக்ரைன் நிகழ்வுகளின் விளைவாக அதிர்ச்சியூட்டும் வன்முறை மற்றும் உயிரிழப்புகளால் உலக வங்கி குழு அதிர்ச்சி அடைந்துள்ளது. இந்த தருணத்தில் உக்ரைன் மக்களுக்கு ஆதரவாக உலக வங்கி இருக்கும். உக்ரைனில் தற்போதைய நிலை பொருளாதார மற்றும் சமூக தாக்கங்களை ஏற்படுத்தும். இதனை சரிசெய்ய நாங்கள் பன்னாட்டு நாணய நிதியத்துடன் இணைந்து ஆலோசனை மேற்கொண்டு வருகிறோம்' என்றார்.




# மதுபோதையில் 5 வயது மகனை கொடூரமாக தாக்கிய தந்தையை கோவை போலீஸார் கைது செய்தனர்

கோவை , பிப். 26-

கோவை மாவட்டம் மதுக்கரையில் 5 வயது மகனை தந்தையே கொடூரமாக தாக்கிய வீடியோ வைரல் ஆன நிலையில் மகனை தாக்கிய தந்தையை மதுக்கரை போலீசார் கைது செய்து சிறையில் அடைத்தனர்.



கோவை மதுக்கரை அறிவொளிநகர் பகுதியை சேர்ந்தவர் சாதிக்பாஷா. இவரது மனைவி ரெஜினா பானு இவர்களுக்கு கடந்த 9 ஆண்டுகளுக்கு முன்பு திருமணமாகி முகமது அசாருதீன் (10) முகமது அர்சத்தீன் (5) என்ற இரு மகன்கள் உள்ளனர். இந்நிலையில் கணவன் மனைவி இடையே ஏற்பட்ட வேறுபாடு காரணமாக கடந்த இரண்டு ஆண்டுகளாக இருவரும் பிரிந்து வாழ்ந்து வருகின்றனர். இதில் மூத்த மகன் ரெஜினா பானுவுடனும், இளைய மகன் சாதிக் பாஷாவுடனும் வசிக்கின்றனர்.

இந்நிலையில் இளைய மகன் அர்ஷத்தீனை, சாதிக் பாஷா கொடூரமாக தாக்கும் வீடியோ சமூகவலைதளத்தில் வைரலானது. இதையடுத்து வீடியோ குறித்து மதுக்கரை போலீசாருக்கு தகவல் கிடைத்த நிலையில் விசாரணை மேற்கொண்ட போலீசார் சாதிக் பாஷாவை கைது செய்தனர். அவரிடம் மேற்கொண்ட விசாரணையில் தனது மனைவியுடன் சேர்ந்து வாழ விரும்பியதாகவும், ஆனால் அவர் செல்போனில் தொடர்பு கொண்டபோது எடுக்காமல் இருந்த நிலையில், இளைய மகனை ரெஜினா பானுவை சந்தித்து பேசியதாகவும் இதனால் ஆத்திரத்தில் மகனை தாக்கியதாகவும் கூறியுள்ளார்.

அடிக்கடி மது போதையில் வந்து 5 வயது மகனை சாதிக் பாஷா கொடூரமாக தாக்கி வருவதாகவும் அப்பகுதி மக்களும் போலீசாரிடம் தெரிவித்தனர். இதனையடுத்து சாதிக்பாட்ஷாவை கைது செய்த போலீசார் அவரை சிறையில் அடைத்தனர்.

# உக்ரைனில் இருந்து தமிழகம் திரும்பும் மாணவர்களின் பயண செலவை அரசே ஏற்கும் முதல்வர் ஸ்டாலின்

சென்னை, பிப். 26-

உக்ரைனில் சிக்கியுள்ள தமிழக மாணவர்கள் தாயகம் திரும்புவதற்கான பயண செலவை அரசே ஏற்கும் என முதல்வர் ஸ்டாலின் அறிவித்துள்ளார்.



உக்ரைன் மீது ரஷ்யா தாக்குதல் நடத்தி வரும் நிலையில், உக்ரைனில் சிக்கி தவிக்கும் தமிழகத்தை சேர்ந்த மாணவர்கள், பொதுமக்களை பத்திரமாக மீட்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு முதல்வர் ஸ்டாலின் கடிதம் எழுதியிருந்தார். அதில், தமிழகத்தை சேர்ந்த தொழில்முறை படிப்புகள் பயிலும் சுமார் 5 ஆயிரம் மாணவர்கள் மற்றும் மாநிலத்தில் இருந்து அங்கு குடியேறியவர்கள் உக்ரைனில் சிக்கி தவித்து வருகின்றனர். அவர்களை இந்தியாவுக்கு அழைத்து வர வேண்டும்' என கோரிக்கை விடுத்தார்.

இந்நிலையில், முதல்வர் ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிவிப்பில், உக்ரைனில் படிக்கும் தமிழகத்தை சேர்ந்த மாணவர்கள் 916 பேர் தமிழக அரசை தொடர்புகொண்டுள்ளனர். தமிழக மாணவர்கள், அங்கு பணியாற்றும் தமிழர்கள் பத்திரமாக மீட்கப்படுவார்கள். உக்ரைனில் மாணவர்கள், பணி நிமித்தமாக உள்ளவர்கள் என 5 ஆயிரம் தமிழர்கள் உள்ளனர். 5 ஆயிரம் பேரை மீட்டு வர தொடர்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். உக்ரைனில் உள்ள மாணவர்கள் தமிழகம் திரும்புவதற்கான செலவை தமிழக அரசே ஏற்கும்.' இவ்வாறு முதல்வர் அறிவித்துள்ளார்.

# அரியலூரில் கனரா வங்கி சார்பில் லோன் மேளா

அரியலூர், பிப். 26-

அரியலூரில் கனரா வங்கி சார்பில், லோன் மேளா நடைபெற்றது.



அரியலூர் பெரியகடைவீதி சுப்பிரமணியர் கோவில் அருகே, வாசவி மஹால் திருமண மண்டபத்தில், கனரா வங்கி அரியலூர் கிளை சார்பில், லோன் மேளாஎனப்படும்மண்டல தனிநபர் கடன் திருவிழா, வங்கியின் கரூர் மண்டல மேலாளர் சரவண பாண்டியன் தலைமையில் நடைபெற்றது.

அரியலூர் கிளை முதன்மை மேலாளர் ராஜ்குமார் வரவேற்றார். விழாவில் அரியலூர் கனரா வங்கி கிளை சார்பில், 32 நபர்களுக்கு வீட்டுக் கடன் மற்றும் அடமான கடன், 2 நபர்களுக்கு வாகன கடன் உட்பட, இரண்டு கோடியே 32 லட்சம் ரூபாய் மதிப்பிலான கடனுதவி வழங்கப்பட்டது.

இந்த கடன் திருவிழாவில், அரியலூர் கனரா வங்கி கிளை முதுநிலை மேலாளர் முருகேசன், மற்றும் வங்கி வாடிக்கையாளர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

# இல்லம் தேடி கல்வி திட்ட தன்னார்வலர்களின் கற்றல் கற்பித்தல் பணி பாராட்டும் படி உள்ளது– மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்

புதுக்கோட்டை, பிப்.26–

இல்லம் தேடி கல்வி திட்ட தன்னார்வலர்களுக்கு திருவரங்குளம் வட்டார வளமையம் சார்பில் இரண்டாம் கட்டப் பயிற்சி மற்றும் கல்விக் கண்காட்சி திருவரங்குளம் அரசினர் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது.



கல்விக்கண்காட்சியினை தொடங்கிவைத்துமாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் சாமி.சத்தியமூர்த்தி தன்னார்வலர்களிடம் பேசியதாவது: புதுக்கோட்டை மாவட்டத்தில் கல்வி கண்காட்சியானது 121 குறுவளமையங்களில் நடைபெறுகிறது. இதில் 5350 தன்னார்வலர்கள் கலந்து கொண்டு தங்களது கற்றல் கற்பித்தல் உபகரணங்களை காட்சிப்படுத்த உள்ளனர். இல்லம் தேடி கல்வி திட்ட தன்னார்வலர்கள் அனைவரும் மையங்களில் எளிய கற்றல் கற்பித்தல் உபகரணங்களை உருவாக்கி கற்பித்தலில் ஈடுபட்டு வருகின்றனர்.

அவர்களது பணி பாராட்டும் படி உள்ளது. மேலும் கல்விக் கண்காட்சியில் கலந்து கொண்டுள்ள தன்னார்வலர்களாகிய நீங்கள் அனைவரும் கடந்த ஒருமாதமாக மையம் நடத்தும் பொழுது ஏற்பட்டுள்ள அனுபவங்களை பிற தன்னார்வலர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும். அதே போல் தங்களுக்கு ஏற்பட்டுள்ள ஐயங்களை கருத்தாளர்களுடன் கலந்தாலோசித்து தெளிவு பெற வேண்டும் என்றார்.

பின்னர் கல்விக் கண்காட்சியினை பார்வையிட்டு சிறப்பாக காட்சிப்படுத்திய தன்னார்வலர்களை பாராட்டினார். நிகழ்வின் பொழுது ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வியின் மாவட்ட உதவி திட்ட அலுவலர் தங்கமணி, உதவி திட்ட ஒருங்கிணைப்பாளர் சுதந்திரன், திருவரங்குளம் அரசினர் மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் முருகையன், மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் ஜான்சுரேஷ், மணிமாறன், இல்லம் தேடி கல்வி திட்ட மாவட்ட ஒருங்கிணைப்பாளர் முனியசாமி ஆகியோர் உடன் இருந்தனர்.

கண்காட்சிக்கான ஏற்பாடுகளை திருவரங்குளம் வட்டார வளமைய மேற்பார்வையாளர் தங்கமணி, ஆசிரிய பயிற்றுநர் வென்சிரொசாரியோ, கணக்காளர் நாகையா ஆகியோர் செய்திருந்தனர்.

# அறந்தாங்கி பகுதியில் பள்ளி செல்லாக் குழந்தைகளின் வீட்டிற்கே சென்று அவர்களை பள்ளியில் சேர்த்த மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்

புதுக்கோட்டை, பிப்.26–

அறந்தாங்கி வட்டார வள மையத்திற்குட்பட்ட அண்ணாநகர் 3வது வார்டில் பள்ளி செல்லாக் குழந்தைகள் மற்றும் மாற்றுத் திறன் கொண்ட குழந்தைகள் குறித்த கள ஆய்வானது புதுக்கோட்டை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் சாமி. சத்தியமூர்த்திதலைமையில் நடைபெற்றது .



கொரோனா பெருந்தொற்றுகாரணமாக பள்ளியிலிருந்து இடைநின்றமாணவர்களை மீண்டும் பள்ளியில் சேர்ப்பது குறித்தும், மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையிலும் நடத்தப்பட்ட இந்த ஆய்வில் தொழில் நிமித்தமாக கேரள மாநிலத்திலிருந்து அறந்தாங்கி அண்ணாநகரில் குடியேறியுள்ள மாலா என்பவரின் குழந்தைகள் மணிகண்டன் ,கிருஷ்ணபிரியா மற்றும் மணமேல்குடியிலிருந்து குடியேறியுள்ள மாணவன் தியாகராஜன் ஆகியோர் பள்ளி செல்லாமல் இடைநின்று இருப்பது கள ஆய்வில் தெரியவந்தது .

உடனே மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் சாமி. சத்தியமூர்த்தி, அக்குழந்தைகளின் பெற்றோர்களிடம் 6 வயது முதல் 18 வயது வரை உடைய அனைத்து மாணவர்களும் கட்டாயம் படிக்க வேண்டும்.அரசு மாணவர்களுக்கு பல்வேறு நலத்திட்டங்களை வழங்கி வருகிறது.எனவே பெற்றோர்கள் அனைவரும் தங்கள் குழந்தைகளை இடைநிற்றல் இல்லாமல் பள்ளிக்கு அனுப்ப வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

பின்னர் மாணவர்கள் மணிகண்டன் (7 ஆம் வகுப்பு),கிருஷ்ணபிரியா(5 ஆம் வகுப்பு) தியாகராஜன் (7 ஆம் வகுப்பு) ஆகியோரின் குடும்ப சூழ்நிலையை கருத்தில் கொண்டு உடனடியாக அருகில் உள்ள அறந்தாங்கி நகராட்சி நடுநிலைப் பள்ளிக்கு அழைத்துச் சென்று பள்ளியில் உடனடியாக சேர்க்க நடவடிக்கை மேற்கொண்டார். பின்னர் மாணவர்கள் மூவருக்கும் தமிழக அரசின் விலையில்லா பாடப்புத்தகம் ,விலையில்லா சீருடை மற்றும் புத்தகப்பை ஆகியவற்றை வழங்கினார்.

அதே போல் காந்திநகர் பகுதியில் பள்ளி செல்லாமல் இருந்த ரோஷன் என்ற மாணவனை காந்திநகர் அரசு உயர்நிலைப்பள்ளியில் 8 ஆம் வகுப்பில் சேர்க்க உத்தரவிட்டார்.

இந்த கள ஆய்வில் ஒருங்கிணைந்த பள்ளி கல்வி மாவட்ட உதவி திட்ட அலுவலர் தங்கமணி, மாவட்ட உதவி திட்ட ஒருங்கிணைப்பாளர் சுதந்திரன், பள்ளி செல்லா குழந்தைகள் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் மணிமாறன் ,வட்டார வள மைய மேற்பார்வையாளர் ஸ்ரீதேவி,அறந்தாங்கி கல்வி மாவட்ட பள்ளி துணை ஆய்வாளர் இளையராஜா , பள்ளி செல்லா குழந்தைகள் வட்டார ஒருங்கிணைப்பாளர் பன்னீர்செல்வன், பள்ளி தலைமை ஆசிரியர் தனலட்சுமி, இல்லம் தேடி கல்வி வட்டார ஒருங்கிணைப்பாளர்கள் கணேசன் மற்றும் கல்யாணராமன் ,இயன்முறை மருத்துவர் சரவணன், சிறப்பாசிரியர் செந்தில் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

# கம்பத்தில் அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம் சார்பாக ஜெயலலிதா பிறந்த நாள் விழா



கம்பம்,பிப்-26:

தேனிதெற்குமாவட்டம் கம்பம் அம்மா மக்கள் முன்னேற்றக் கழகத்தின் சார்பாக முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் 74 வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கி கொண்டாடப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் நகர செயலாளர் பி.இராஜாமணி, அவைத் தலைவர் பி.ராமன்,மாவட்ட கழக துணைச் செயலாளர் ஆர்.டி.ஜி.குமரன், அம்மா பேரவை செயலாளர் ஜி.வி.அறிவழகன்,டேவிட் அன்பையா, ஷாகுல் ஹமீது,சுசிலா நாகராஜன், தீபாரமேஷ்,லதாரவி,சரிதா கருப்பையா, சாமாண்டி, நாகராஜன், மாணவரணி செயலாளர் சுதந்திரராஜ், கண்ணன், ரபீக், பைசல் மற்றும் 33 வார்டு கழக செயலாளர்கள், சார்பு அணிநிர்வாகிகள், தொண்டர்கள் ஆகியோர் கலந்து கொண்டு பிரஷர் குக்கர் சின்னத்திற்கு வாக்களித்த பொதுமக்களுக்கு நன்றி தெரிவித்து இனிப்புகள் வழங்கி கொண்டாடினர்.






புதுக்கோட்டை மாவட்டம் மணமேல்குடி ஒன்றியத்திற்குட்பட்ட நடுநிலை உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு இடையே பள்ளி பரிமாற்றுத் திட்டம் இணைய வழியில் நடைபெற்றது. பள்ளி பரிமாற்று திட்டத்தில் 34 பள்ளிகளில் ஒரு பள்ளிக்கு இரண்டு ஆசிரியர்கள் வீதம் 68 ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர். இதற்கான ஏற்பாடுகளை ஒவ்வொரு பள்ளியின் தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர் பயிற்றுநர்கள் செய்திருந்தனர்.

# அறந்தாங்கியில் தென்னக இரயில்கள் அனைத்துக்கும் புக்கிங் ஆபிஸ் :மஜக கோரிக்கை



அறந்தாங்கி, பிப்.26:

அறந்தாங்கி இரயில் நிலையத்தில் தென்னக இரயில்கள் அனைத்துக்கும் புக்கிங் ஆபிஸ் தனி கவுன்டரில் அமைத்து தரவேண்டும் என மஜக மாவட்ட செயலாளர் முபாரக் அலி திருச்சி கோட்ட மேலாளரிடம் கோரிக்கை மனு அளித்துள்ளார்.

காரைக்குடி திருவாரூர் விரைவு அகல இரயில் பாதையை ஆய்வு செய்ய தனி இரயிலில் அறந்தாங்கி வருகை தந்த திருச்சி கோட்ட மேலாளரிடம் மனிதநேய ஜனநாயக கட்சி மாவட்ட செயலாளர் முபாரக் அலி அறந்தாங்கி இரயில் நிலையம் குறித்த தேவைகளை கோரிக்கை மனு ஒன்றை அளித்துள்ளார்.

அதில் அறந்தாங்கி மார்க்கமாக காரைக்குடி திருவாரூர் இரயில் பாதை பல ஆண்டுகளுக்கு பின் அகல இரயில் பாதையாக மாற்றி விரைவு இரயிலயும் இயக்கி தந்த தென்னக இரயில்வே மற்றும் திருச்சி கோட்ட இரயில் நிர்வாகத்திற்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

அறந்தாங்கி இரயில் நிலையத்திற்கு கீழ்க்கண்ட மூன்று தேவைகளை பொதுமக்கள் சார்பாக கோருகிறோம். தென்னக இரயில்கள் அனைத்திற்கும் புக்கிங் ஆபிஸ் அறந்தாங்கி இரயில் நிலையத்தில் தனி கவுன்டராக அமைத்து தரவேண்டும். இத்தடத்தில் இயக்கப்படும் காரைக்குடி திருவாரூர் இரயில்களை மதுரை மற்றும் சென்னை வரை ஒரே டிக்கெடில் இணைப்பு இரயில்களாக இயக்கவேண்டும். அறந்தாங்கி பாரம்பரியம் மிக்க விவசாய மற்றும் வியாபார தளம் எனவே ஏற்கனவே அறந்தாங்கி இரயில் நிலையத்தில் இருந்த குட்செட்டைவிட பெரிய குட்செட் விரைவில் அமைத்து முதல் ஒருவருடத்திற்கு 50% மானியம் சர்வீஸ் செய்துதருமாறு கேட்டுக்கொள்கிறோம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

### தமிழ் வளர்ச்சித்துறை சார்பில்

# மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள அரசு அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்கும் விதமாக ஆட்சி மொழி பயிலரங்கம் நடைபெற்றது



மயிலாடுதுறை , பிப்.26:

தமிழகத்தில் அரசு அலுவலகங்களில் கோப்புகளை தமிழில் கையாளுவது குறித்து அரசு அலுவலர்களுக்கு தமிழ் வளர்ச்சித்துறை சார்பில் பயிற்சி அளிக்கப்படுகிறது. அதன் ஒரு கட்டமாக ஆட்சி மொழி பயிலரங்கம் மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் கூட்டரங்கில் நடைபெற்றது. மாவட்ட வருவாய் அலுவலர் முருகதாஸ் பயிலரங்கை துவக்கிவைத்துபேசினார்.

2 நாட்கள் நடைபெறும் நிகழ்ச்சியில் முதல் நாளான நேற்று நாகப்பட்டினம் தமிழ் வளர்ச்சி உதவி இயக்குனர் அன்பரசி, தமிழ்ச்செம்மல் விருதாளர் முனைவர் துரை குணசேகரன், தமிழ் வளர்ச்சித் துறை முன்னாள் உதவி இயக்குனர் புலவர் ஆறுமுகம், உள்ளிட்டோர் பங்கேற்று ஆட்சி மொழி அறிந்து கொள்வோம், குறைகளையும், நடவடிக்கைகளும், தமிழில் குறிப்புகள் வரைவுகள் செயல்முறைகள் செய்வது, மொழிபெயர்ப்பு கலைச்சொல்லாக்கம், ஆட்சி மொழி வரலாறு அதற்குண்டான சட்டம் விரிவாக்கம் ஆகியவற்றை எடுத்துரைத்தனர். இந்த நிகழ்ச்சியில் பல்வேறு துறையை சேர்ந்த கோப்புகளை கையாளும் அலுவலர்கள் பங்கேற்றனர்.

# வெட்டி கொல்லப்பட்ட கணவர் சமாதியில் வெற்றி சான்றிதழை வைத்து அஞ்சலி செலுத்திய மனைவி





சென்னை , பிப்.26:

சென்னை மாநகராட்சி பெருங்குடி மண்டலத்துக்குட்பட்ட 188-வது வட்ட தி.மு.க. செயலாளரான செல்வம் என்பவர் கடந்த 1-ந் தேதி வெட்டி கொலை செய்யப்பட்டார். இந்த நிலையில், நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலில் 188-வது வார்டு தி.மு.க. வேட்பாளராக இவரது மனைவி சமீனா செல்வம் அறிவிக்கப்பட்டார்.

இதையடுத்து நேற்று முன்தினம் முடிவுகள் அறிவிக்கப்பட்ட நிலையில், தி.மு.க. வேட்பாளர் சமீனா செல்வம் 7,256 வாக்குகள் பெற்று, 2,945 வாக்குகள் வித்தியாசத்தில் அ.தி.மு.க. வேட்பாளரை வீழ்த்தி வெற்றி பெற்றார். இதைத்தொடர்ந்து,வெற்றி பெற்ற சான்றிதழுடன் மடிப்பாக்கத்தில் உள்ள தனது கணவர் செல்வம் சமாதிக்கு தொண்டர்களுடன் சமீனா செல்வம் சென்றார். அங்கு வெற்றி சான்றிதழை வைத்து கண்ணீர் மல்க அஞ்சலி செலுத்தினார்

# திருத்தணி அதிமுக ஒன்றிய செயலாளர் இ.என்.கண்டிகை.ரவி ஏற்பாட்டில் ஜெயலலிதா பிறந்தநாள் விழா



திருத்தணி பிப்.26

ஜெயலலிதா பிறந்தநாள் விழா திருத்தணி அதிமுக ஒன்றிய செயலாளர் இ.என். கண்டிகை.ரவி ஏற்பாட்டில் சிறப்பாக கொண்டாடப்பட்டது கே.ஜி. கண்டிகை உள்ளிட்ட 27 ஊராட்சிகளிலும் மறைந்த ஜெயலலிதாவின் 74ம் ஆண்டு பிறந்தநாள் விழாவை சிறப்பாக கொண்டாடினர்.

அலங்கரிக்கப்பட்ட அவரது திரு வுருவ படத்துக்கு மாலை அணிவித்து மலர் தூவி வணங்கினர் தொடர்ந்து ஏழைகளுக்கு அன்னதானம் இனிப்புகளும் வழங்கப்பட்டன அக்ரஹாரம் கிராமத்தில் அங்கன்வாடி பள்ளி குழந்தைகளுக்கு இனிப்புகள் உணவு சாப்பிடும் தட்டுகள் வழங்கி கொண்டாடினர் நிகழ்ச்சியில் நிலவள வங்கி தலைவர் டி.எம். சீனிவாசன் ஒன்றிய பொருளாளர் கோ. தாமோதரன் கவுன்சிலர்கள் பாலாஜி. வேலு .முன்னாள் கவுன்சிலர் கருணாநிதி மற்றும் பத்மாபுரம் சுரேஷ் ஆதித்யா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்



▶ திருவள்ளூர் நகராட்சி 25வது வார்டு பாமக வேட்பாளர். க.விஜயலட்சுமி கண்ணண் தான் வெற்றி பெற்றதற்கு தனது ஆதரவாளர்களை சந்தித்து நன்றிகளைத் தெரிவித்தார்.

அமிர்தம் ஸ்டோர்ஸ் A/C
♦ பாத்திரங்கள் ♦ பர்னிச்சர்ஸ் ♦ எலக்ட்ரானிக்ஸ்
♦ பிளாஸ்டிக்ஸ் ♦ பேக்ஸ்
கீழ 2ம் வீதி, புதுக்கோட்டை. போன் : 04322 290395
www.amirthamstores.co.in amirthammetals@gmail.com



▶ முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா பிறந்தநாளில், அனைத்துலக எம்.ஜி.ஆர் மன்ற இணைச்செயலாளர் இராயபுரம் ஆர்.மனோ ஏற்பாட்டில் இராஜாஜிசாலையில், அலங்கரிக்கப்பட்ட முன்னாள் முதல்வர் ஜெயலலிதா திருவுருவப்படத்திற்கு மலரஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சியும் அதனை தொடர்ந்து மதிய உணவு வழங்கும் நிகழ்ச்சியும் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் முன்னாள் ராஜ்யசபா உறுப்பினர், வடசென்னை தெற்கு(மேற்கு) மாவட்டச்செயலாளர் நா.பாலகங்கா மற்றும் கட்சி தொண்டர்கள் பெருந்திரளாக கலந்துக்கொண்டனர்.



▶ திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கில் நேற்று தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பாக மாவட்ட அளவிலான பயிற்றுநர்களுக்கு உயிரி பல்வகைமை குறித்து நடைபெற்ற கருத்துப் பட்டறையை மாவட்ட ஆட்சித் தலைவர் ஆல்பி ஜான் வர்கீஸ் துவக்கி வைத்து, தலைமை உரையாற்றினார். உடன் மாவட்ட வன அலுவலர் கே. ராம் மோகன். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் வை.ஜெயக்குமார், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்க திட்ட இயக்குநர் மல்லிகா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) எபினேசன், பயிற்சியாளர்கள் ரகுராமன், ராஜ், உதவி திட்ட அலுவலர் சாந்தி, ராம்தாஸ் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்.



▶ திருவள்ளூர் மாவட்டம் வில்லிவாக்கம் ஒன்றியம் மோரை ஊராட்சியில் பொது மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான ஈஸ்வரன் நகர், ஆண்டாள் நகர், நந்தவனம் நகர், மரியா நகர் ஆகிய நகர்களை இணைக்கும் டி.எஸ்.பி கேம்ப் பிரதான சாலையையும், மேட்டுபாளயம் ஸ்ரீராம் நகர் பிரதான சாலையை புதிய தார் சாலையாக அமைக்கும் பணிகளுக்கும் மாவட்ட கவுன்சிலர் மு.சதிஷ்குமார் நிதியிலிருந்து நிதி ஒதுக்கப்பட்டு புதிய தார்சாலை அமைக்கும் பணிகளுக்கான பூஜை செய்து பணி துவங்கப்பட்டது. இதில் மோரை ஊராட்சி மன்ற தலைவர் ஆர்.திவாகரன் துணை தலைவர் கார்த்திக் ,வார்டு உறுப்பினர்கள், ஊராட்சி செயலாளர் மற்றும் பொது மக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



▶ திருவள்ளூர் நகராட்சி 27வது வார்டு திமுக வேட்பாளர் சி. சு ரவிச்சந்திரன் தான் வெற்றி பெற்றதற்கு தனது ஆதரவாளர்களை சந்தித்து நன்றிகளைத் தெரிவித்தார்



▶ திருவள்ளூர் நகராட்சி 15வது வார்டு திமுக வேட்பாளர் தே . செல்வகுமார் தான் வெற்றி பெற்றதற்கு தனது ஆதரவாளர்களை சந்தித்து நன்றிகளைத் தெரிவித்தார்

70 ஆண்டு கால பாரம்பரியம்
TM சுந்தரம் மளிகை
மொத்தம் மற்றும் சில்லரை வியாபாரம்
எங்களின் சார்பு நிறுவனம்
திவ்யா அரிசி மண்டி
செல் : 9489275999

# மயிலாடுதுறை மாவட்டத்தில்4 புதிய 108 ஆம்புலன்ஸ் பொதுமக்கள் பயன்பாட்டுக்கு மாவட்ட ஆட்சியர் லலிதா தொடங்கி வைத்தார்




மயிலாடுதுறை, பிப்.26:

மயிலாடுதுறை மாவட்டத்தில் பொதுமக்கள் அவசரகால சிகிச்சை பெறுவதற்காக 12 அவசரகால உறுதியான 108 ஆம்புலன்ஸ் செயல்பட்டு வருகிறது. இந்த ஆம்புலன்ஸ் மூலம் விபத்தில் அடிபட்டு உயிருக்கு போராடி வருபவர்களுக்கு முதலுதவி சிகிச்சை அளித்து அரசு மருத்துவமனையில் கொண்டு செல்வது, வீட்டிலிருந்து மருத்துவமனைக்கு செல்ல முடியாமல் வாகன வசதி இன்றி தவிப்பவர்களுக்கு உதவுவது போன்ற சேவை பணிகளை செயல்படுத்தி வருகிறது.

இந்நிலையில் இரண்டு அவசர கால ஊர்தி பழுதடைந்தது. இது தமிழக அரசின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டு ரூ.1 கோடி மதிப்பீட்டில் அனைத்து வசதிகளும் அடங்கிய நான்கு 108 ஆம்புலன்ஸ் வாகனங்கள் மயிலாடுதுறை மாவட்டத்திற்கு வழங்கப்பட்டது. பழுதடைந்த வாகனங்களுக்கு மாற்றாக 2 வாகனங்களும், மங்கைநல்லூர் திருமுல்லைவாசல் ஆகிய இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு இரண்டு 108 ஆம்புலன்ஸ்களும் வழங்கப்பட்டன.

புதிய 108 ஆம்புலன்ஸ் சேவையை மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் மாவட்ட ஆட்சியர் லலிதா கொடியசைத்து பொதுமக்களுக்கு சேவையாற்றிட தொடங்கி வைத்தார். வானங்களுக்கு பூஜை செய்யப்பட்டு ஒப்படைக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட மருத்துவ கண்காணிப்பாளர் மகேந்திரன், மாவட்ட இணை இயக்குனர் சிவக்குமார், மாவட்ட 108 ஆம்புலன்ஸ் திட்ட மேலாளர் மோகன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# செய்யாறு நகர அதிமுக சார்பில் முன்னாள் முதல்வர் ஜெ.ஜெயலலிதாவின் பிறந்த நாள் விழா கொண்டாட்டம்



தி.மலை , பிப்.26:

திருவண்ணாமலை வடக்கு மாவட்டம் செய்யாறு நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலில் போட்டியிட்ட அதிமுக வேட்பாளர் நித்யா பிரகாஷ் வெற்றிபெற்ற செய்த 10-ஆவது வார்டு பொது மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் முன்னாள் அமைச்சர் ஆரணி சட்டமன்ற உறுப்பினர் சேவூர் எஸ்.ராமச்சந்திரன், திருவண்ணாமலை வடக்கு மாவட்ட கழக செயலாளர் செய்யாறு முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தூசி கே.மோகன், முக்கூர் என்.சுப்பிரமணியன் அவர்களும் நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலில் வெற்றிபெற்ற நித்யா பிரகாஷ் அவர்களுக்கு வாக்களித்து வெற்றிபெறச் செய்த 10வது வார்டு மக்களுக்கு நன்றி தெரிவித்தனர்.

பின்னர் மறைந்த முன்னாள் முதல்வர் ஜெ.ஜெயலலிதாவின் 74-வது பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு இனிப்பு மற்றும் 250 குடும்பங்களுக்கு 25 கிலோ அரிசி மூட்டை வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்டக் கழக இணைச் செயலாளர் விமலா மகேந்திரன், ஒன்றிய செயலாளர்கள் எம். மகேந்திரன், அரங்கநாதன், நகர செயலாளர் ஜனார்த்தனன், நகர அம்மா பேரவை செயலாளர் வெங்கடேசன், மாவட்ட கழக நிர்வாகிகள் அருணகிரி, ரவிச்சந்திரன், பூக்கடை கோபால், கோவிந்தராஜ், கன்னியப்பன் மற்றும் செபாஸ்டின் துரை, துரை, சுதாகர், பிரகாஷ், மகாதேவன், ராஜேஷ் குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# உலக அமைதி மற்றும் சமாதானத்தை வலியுறுத்தி முகப்பேர் வேலம்மாள் பள்ளி மாணவர்கள் நடத்திய அமைதி வழிபாட்டு கூட்டம்




சென்னை , பிப்.26:

முகப்பேர் வேலம்மாள் மையப்பள்ளியின் ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு மாணவர்கள் ரஷ்யா உக்ரைன் நாடுகளிடையே நடைபெறும் போரில் இருநாட்டு மக்களின் நிலையைக் கருத்தில் கொண்டு அவர்களது அமைதியான நல்வாழ்வுக்காகவும் மேலும் உலக அமைதியை வலியுறுத்தியும் மேற்கொண்ட இறைவனைப் பிரார்த்திக்கும் அமைதி வழிபாட்டு கூட்டம் நடைபெற்றது.

கனத்த இதயத்துடன் தொடங்கிய இவ்வழிபாட்டுகூட்டத்தில் அபாயகரமான போர்ச் சூழலில் உள்ள ரஷ்யா உக்ரைன் நாடுகளின் போர்ப்பதற்றம் நீங்கி மக்களின் இயல்பு வாழ்க்கை திரும்ப வேண்டி இறைவனைப் பிரார்த்தித்து மந்திரங்கள் ஓதப்பட்டன.

போரைத் தவிர்த்து அமைதியை வலியுறுத்தும் வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியிருந்த மாணவர்கள் விழிப்புணர்வை அனைவருக்கும் ஏற்படுத்தினர். பின்னர் மாணவர்களிடையே பேசிய பள்ளி துணை முதல்வர் சுமதி சிதைந்த கட்டிடங்களோடு சிதைந்து விடாமல் மனிதநேயம் காக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியும் தற்போதுள்ள போர்ச் சூழலையும் விவரித்து மாணவர் களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தினார் மற்றும் யுத்தகளம் தவிர்த்தால் மகிழ்ச்சிக் களமாகும் வாழ்வு என்பதை மாணவர்கள் மனதில் நிலைநிறுத்தினார்.

இறுதியாக அமைதி வழிபாட்டுப் பாடலுடன் நிறைவுபெற்ற இந்நிகழ்வு தற்கால வாழ்வியலை அறிந்து அமைதியை அனைவர் மனதிலும் விதைப்பதாக அமைந்திருந்தது.



▶ திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் அடுத்த அரட்டவாடி பகுதியில் உள்ள அரசினர் மேல்நிலைப்பள்ளியில் தமிழக அரசு கல்வித்துறை அறிவித்தவாறு "பள்ளி பரிமாற்ற" நிகழ்ச்சி நடைபெற்றது. அப்போது பிஞ்சூர் பள்ளியில் அறிவியல் பட்டதாரி ஆசிரியராகப் பணியாற்றும் ராஜ்வேல் ஆசிரியர் அரட்டவாடி பள்ளிக்கு வருகை புரிந்தார். அப்போது அரட்டவாடி பள்ளியின் தலைமை ஆசிரியர் வி.சதாசிவம் வரவேற்று "பள்ளி பரிமாற்ற" நிகழ்ச்சியை துவக்கி வைத்தார். உடன் அரட்டவாடி மேல்நிலைப்பள்ளியின் ஆசிரியர்கள் கோ.மோகன், சு.தங்கேஸ்வரன், ஜெ.ரஞ்ஜனி மற்றும் பள்ளி மாணவர்கள் கலந்துகொண்டு பள்ளி பரிமாற்றத்தின் தன்மையை பற்றி அறிந்து கொண்டனர்.

# திருமருகல் ஒன்றியத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் தேங்கிக் கிடக்கும் நெல் மூட்டைகள் நடவடிக்கை எடுக்க விவசாயிகள் கோரிக்கை



**நாகப்பட்டினம், பிப்.26-**

திருமருகல்ஒன்றியத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் தேங்கிக் கிடக்கும்நெல் மூட்டைகள் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க விவசாயிகள் கோரிக்கைவிடுத்துள்ளனர்.

சம்பா அறுவடை நாகை மாவட்டத்தில் சம்பா நெல் அறுவடை பணிகள் முடிவடைந்து உள்ளது.இந்த நெல்லை விற்பனை செய்ய தமிழக அரசு சார்பில் மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன.

திருமருகல்ஒன்றியத்தில் திட்டச்சேரி,திருமருகல்,சீயாத்தமங்கை, பில்லாளி, கோட்டூர்,திருப்பயத்தாங்குடி,ஆலத்தூர்,அருள்மொழிதேவன்,வவ்வாலடி,வடகரை,கொட்டாரக்குடி,காரையூர், குத்தாலம்,நரிமணம்,அம்பல்,அண்ணாமண்டபம் உள்ளிட்ட 25-க்கும் மேற்பட்ட இடங்களில் அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. திருமருகல் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளை சேர்ந்த விவசாயிகளிடம் இருந்து அறுவடை செய்த நெல்லை அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையம் மூலம் வாங்கப்பட்டு வருகிறது.

அவ்வாறு கொள்முதல் செய்யப்பட்ட நெல் மூட்டைகள் நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு கொண்டு செல்லப்படுகிறது திருமருகல் ஒன்றியத்தில் பெரும்பாலான இடங்களில் நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு கொண்டுசெல்லப்படாமல் தேங்கிக் கிடக்கின்றன.

**தேங்கிக் கிடக்கும் நெல் மூட்டைகள்**

இந்த நிலையில் திருமருகல் ஒன்றியத்தில் பெரும்பாலான அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறந்தநிலையில் உள்ளது. இந்த முட்டைகளை நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு எடுத்துச் செல்லப்படாமல் ஒவ்வொரு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களிலும் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட நெல்மூட்டைகள் தேங்கிக் கிடக்கின்றன.இதனால் திடீரென மழைபெய்தால் திறந்தவெளிகளில் அடுக்கி வைக்கப்பட்டுள்ள நெல் மூட்டைகள் நனைந்து சேதமாகும் நிலை உள்ளது.

இது குறித்து அந்த பகுதி விவசாயிகள் கூறுகையில்,எங்களிடம் இருந்து கொள்முதல் செய்யப்படும் நெல் மூட்டைகள் நெல் நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு அனுப்பி வைக்கப்படும். ஆனால் திருமருகல் ஒன்றியத்தில் உள்ள பெரும்பாலான அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்கு நெல் மூட்டைகளை ஏற்றிச் செல்ல நுகர்பொருள் வாணிபக் கழகத்திலிருந்து லாரிகள் அனுப்பாததால் நெல் மூட்டைகள்தேங்கிக் கிடக்கின்றன.

திடீரென மழை பெய்தால் நெல் மூட்டைகள் நனைந்து சேதம் ஏற்படும் நிலை உள்ளது.எனவே சம்பந்தப்பட்டஅதிகாரிகள் தேங்கிக்கிடக்கும் நெல் மூட்டைகளை விரைவாக எடுத்துச் சென்று பாதுகாக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்என கோரிக்கை விடுத்துள்ளனர்.




| தங்கம் | கிராம் | 22 கேரட் தங்கம் | 24 கேரட் தங்கம் |
|---|---|---|---|
| விலை | 1 கிராம் | Rs.4,809 | Rs.5,175 |




முதன்மை செயலாளர் மற்றும் நில சீர்திருத்த ஆணையர் பீலா ராஜேஷ் பூமிதானம் நிலம் மற்றும் நில சீர்திருத்தங்கள் குறித்து சென்னையில் இருந்து காணொலி காட்சி வாயிலாக புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் கவிதா ராமு உடன் மாவட்ட ஆட்சியரகத்தில் நேற்று கலந்தாய்வு மேற்கொண்டார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் செல்வி மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

# விராலிமலையில் 15 வயது சிறுமியை கர்ப்பமாக்கிய நபர் குண்டர் தடுப்பு சட்டத்தில் கைது



**புதுக்கோட்டை , பிப்.26-**

புதுக்கோட்டை மாவட்டம் விராலிமலை அருகே 15 வயது சிறுமிக்கு பாலியல் தொந்தரவு கொடுத்து கர்ப்பமாக்கிய நபரை போக்சோ சட்டத்தின் கீழ் போலீசார் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

புதுக்கோட்டை மாவட்டம் விராலிமலை அடுத்த கவரப்பட்டி கிராமத்தில் கடந்தாண்டு பத்தாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த 15 வயது சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்து கர்ப்பமாக்கிய அதே ஊரைச் சேர்ந்த சின்னக்கண்ணு என்பவரின் மகன் 49 வயதான குழந்தைவேலு மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டு புதுக்கோட்டை மாவட்ட சிறையில் அடைக்கப்பட்டார்.

சிறுமி மற்றும் பெண்களுக்கு எதிரான பாலியல் தொடர்பான செயல்களில் ஈடுபடும் நபர்கள் நடவடிக்கையை கட்டுப்படுத்தும் பொருட்டு கைதுசெய்யப்பட்ட குழந்தைவேலு மீது மாவட்ட காவல் கண்காணிப்பாளர் நிஷா பார்த்திபன் பரிந்துரையின்பேரில்மாவட்ட கலெக்டர் கவிதா ராமு ஆணையின்படி குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் நேற்று நடவடிக்கை எடுக்கப்பட்டு திருச்சி மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.

## கள்ளக்குறிச்சி பாதூர் கிராமத்தில்

# ஜெயலலிதாவின் 74 வது பிறந்த நாள் விழா கோவிலில் சிறப்பு அபிஷேகம்





கள்ளக்குறிச்சி, பிப்,26_

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் உள்ள நகராட்சிகள், பேரூராட்சிகள், ஊராட்சிகளிலும்அதிமுக நிர்வாகிகள் மற்றும் கழகத் தொண்டர்கள் பல்வேறு இடங்களில் முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் 74-வது பிறந்தநாளை முன்னிட்டு அவருடைய திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தி பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது,

இதன் ஒரு பகுதியாக உளுந்தூர்பேட்டை அருகே திருநாவலூர் ஒன்றியத்தில் உள்ள பாதூர் கிராமத்தில் சம்பத் ஐயர் தலைமையில், மாவட்ட செயலாளரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான குமரகுரு சிறப்பு அழைப்பாளராக கலந்துகொண்டு ஜெயலலிதாவின் பிறந்த நாளை முன்னிட்டு கழகக் கொடியினை ஏற்றி வைத்து, அங்கு அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த ஜெயலலிதாவின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

இதனையடுத்து பாதூர் கிராமத்தில் உள்ள பெருமாள் கோவிலில் சிறப்பு அபிஷேகம் செய்து, பொதுமக்களுக்கு இனிப்புகள் மற்றும் அன்னதானம் வழங்கி பிறந்தநாளை கொண்டாடினர். இந்நிகழ்வின் போது ஒன்றிய செயலாளர் சந்திரன், ஒன்றிய துணை செயலாளர் ராஜாராம், மணி, கண்ணன், குமார், பாஸ்கர், களமருதூர் ஆனந்தன் மற்றும் கழக நிர்வாகிகளும், தொண்டர்களும், பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

# எல்லார் மீதும் அன்பு செலுத்துங்கள் – வைரல் சிறுவன் கலாமுக்கு வீடு வழங்கியது தமிழக அரசு



**சென்னை , பிப்.26-**

தனியார் இணையதள தொலைக்காட்சி ஒன்று பள்ளி, கல்லூரிகளில் ஹிஜாப் அணிவது குறித்து மாணவர்களிடம் கருத்து கேட்டது. அதற்கு சென்னை கண்ணகிநகரை சேர்ந்த அப்துல்கலாம் என்ற சிறுவன் அளித்த பதில் இணையத்தில் வைரலானது.

அந்த பேட்டியில் பேசியசிறுவன்,“உலகத்துல அனைவரும் சமம், நம்ப யாரையும் புடிக்காதுன்னு முடிவு எடுக்க முடியாது. எல்லாரும் நம்பளை மாதிரிதான். சிலப்பேருக்கு கஷ்டம் இருக்கும். அந்தக் கஷ்டத்தை வெளிலகாட்ட மாட்டாங்க. உள்ளேயே வச்சிக்கிட்டு இருப்பாங்க. யாரையும் புடிக்காதுன்னு சொல்லாதீங்க. எல்லாரும் என்னை பல்லான்னுதான்( பட்டப்பெயர் ) கூப்பிடுவாங்க. நான் ஏன் யாரையும் புடிக்காதுன்னு சொல்லணும்? எல்லாரும் நண்பர்கள் மாதிரிதான். ஒற்றுமை இல்லாம ஏன் இருக்கணும். நம்ம நாடு ஒற்றுமை நாடுன்னு சொல்றோம். ஒற்றுமை இல்லாம இருந்துச்சினா எப்படி?” என்று கூறியிருந்தார்.

இந்த நிலையில் மாணவன் அப்துல் கலாமுக்கு ஆதரவு தெரிவிக்கும் விதமாகவும், அவரை பாராட்டும் விதமாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேரில் அழைத்திருந்தார். தலைமைச்செயலகத்தில் தனது பெற்றோருடன் சென்ற சிறுவன் அப்துல் கலாம் முதலமைச்சர் ஸ்டாலினிடம் வாழ்த்து பெற்றார். மேலும் சிறுவனின் தாயை பொறுத்தவரை அவர் முன்னாள் இந்திய குடியரசுத் தலைவர் அப்துல்கலாமின் மாணவி. வர்தா புயலின்போது தங்களது வீட்டினை பறிகொடுத்ததாக கூறினார். முதுகலை படிப்பு படித்திருந்தாலும் மதம் மாறி திருமணம் செய்துகொண்டதால் தங்களை யாருமே ஏற்றுக்கொள்ளவில்லை என அவர் கூறினார். மேலும்சிறுவனின் பேட்டி வைரலானதையடுத்து அவர் தங்கியிருந்த வீட்டிலிருந்து காலி செய்யுமாறு வீட்டு உரிமையாளர் வலியுறுத்தியுள்ளார்.

இந்நிலையில்,சிறுவன் அப்துல் கலாம் குடும்பத்தினருடன் இன்று அமைச்சரை சந்தித்தார். அப்போது, சிறுவன் அப்துல் கலாம் குடும்பத்திற்கு தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் கீழ் வீடு ஒதுக்கீடு செய்யப்பட்டு அதற்கான ஆணை நாளை வழங்கப்படும் என நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய அமைச்சர் தா. மோ. அன்பரசன் தெரிவித்துள்ளார்.




## ஆரணி பேரூராட்சிமன்ற திமுக உறுப்பினர்கள்

# பொன்னேரியில் எம்எல்ஏ துரைசந்திரசேகரை சந்தித்து வாழ்த்து பெற்றனர்



**ஊத்துக்கோட்டை, பிப்26-**

திருவள்ளூர் மாவட்டம்,சோழவரம் ஒன்றியம், ஆரணி பேரூராட்சியில் நடைபெற்ற நகர்ப்புற உள்ளாட்சி மன்றத் தேர்தலில் தி.மு.க.சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற 10-வது வார்டு கவுன்சிலரும்,முன்னாள் பேரூர் தி.மு.க.செயலாளருமான கண்ணதாசன், 13-வது வார்டில் வெற்றி பெற்ற பொன்னரசி ஆகியோர் பொன்னேரி தொகுதி காங்கிரஸ் கட்சி எம்.எல்.ஏ.துரைசந்திரசேகரை பொன்னேரியில் உள்ள அவரது அலுவலகத்தில் சந்தித்து சால்வை அணிவித்து வாழ்த்து பெற்றனர். அருகில், ஆரணி பேரூர் திமுக செயலாளர் ஜி.பி. வெங்கடேசன்,நிலவழகன் ஆகியோர் உள்ளனர்.

# முன்னாள் திமுக நகர செயலாளர் 4ம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி மாலை அணிவித்து மரியாதை



**புதுக்கோட்டை , பிப்.26-**

புதுக்கோட்டை திமுக முன்னாள் நகர கழக செயலாளரும் மாவட்ட ஊராட்சி குழு தலைவராகவும் தீர்மான குழு உறுப்பினராக பணியாற்றி மறைந்த முத்துச்சாமியின் நான்காம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டுபுதுக்கோட்டை கம்பன் நகரில் உள்ள அவருடைய இல்லத்தில் அலங்கரிக்கப்பட்ட அவருடைய புகைப்படத்திற்கு திமுக முக்கிய நிர்வாகிகள் மலர்தூவி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் திமுகவில் தனக்கென ஒரு அடையாளத்தை நிலை நாட்டிக்கொண்டுகட்சியை பலப்படுத்துவதிலும்கட்சி அறிவிக்கும் போராட்டம் மற்றும் பல்வேறு கட்சி நிகழ்வுகளில் அதிக அளவில் கலந்து கொண்டு புதுக்கோட்டையில் திமுக கட்சியைவலுப்பெறசெய்து மறைந்த முத்துச்சாமியின் மறைவு தினத்தை ஒவ்வொரு ஆண்டும் திமுகநிர்வாகிகள் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

அதன்படி நேற்று நான்காம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு கம்பம் நகரில் அவருடைய இல்லத்தில் அலங்கரிக்கப்பட்ட முத்துச்சாமியின் புகைப்படத்திற்கு சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் முத்துராஜா மற்றும் 25வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திலகவதி செந்தில் மற்றும் முத்துசாமி அவர்களின் குடும்பத்தார்கள் இளம்பரிதி, இளங்கதிர், இளவேனில், மாவட்ட பொறியாளர் அணிதுணை அமைப்பாளர் தென்னரசு, 37வது வட்ட கழக செயலாளர் ராஜதுரை, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் இளஞ்சேரன் முத்துச்சாமி, நகர இளைஞரணி அமைப்பாளர் கணேஷ் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டு முத்துசாமியின் புகைப் படத்துக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

மேலும் 37வது திமுக வட்ட கழகசெயலாளர் ராஜதுரை ஏற்பாட்டில்புதுக்கோட்டை சத்தியமூர்த்தி சாலையிலுள்ள காதுகேளாதோர் பள்ளியில் மதிய உணவும் வழங்கப்பட்டது.

# அறந்தாங்கி அருகே சிறப்பு கால்நடை மருத்துவ முகாம், கலந்துகொண்ட பொதுமக்களுக்கு தாம்பூலம் பரிசு



அறந்தாங்கி பிப்.26-

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி அருகே சிறப்பு கால்நடை மருத்துவ முகாம், கால்நடைகளுக்கு மருத்துவம் பெற்றுக் கொண்ட பொதுமக்களுக்கு தாம்பூலம் பரிசாக வழங்கப்பட்டது.

தமிழகத்தில் பரவலாக கால்நடைகளுக்குகோமாரி உள்ளிட்ட வைரஸ் நோய் பரவி வருகின்றது. அதனை கட்டுப்படுத்தும் விதமாக தமிழக அரசு சார்பில் பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக காராவயல் கிராமத்தில் சிறப்பு கால்நடை மருத்துவ முகாம் நடைபெற்றது.முகாமில் ஒன்றியக்குழு தலைவர் மகேஸ்வரி சண்முகநாதன் கலந்து கொண்டு நிகழ்வை தொடங்கி வைத்தார். முகாமில் கால்நடைகளுக்கு கோமாரி நோய்கான தடுப்பூசி, செயற்கை கருவூட்டல், எதிர்ப்பு மருந்துகள் ஆகியன வழங்கப்பட்டன.

இதில் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு தங்களது கால்நடைகளுக்கு மருத்துவ வசதி பெற்று பயனடைந்தனர். மேலும் மருத்துவ வசதி பெற்ற கால்நடைகளின் உரிமையாளர்களுக்கு மருத்துவநிர்வாகம்சார்பில் தாம்பூலம் கொடுத்து ஊக்குவிக்கப்பட்டது. நிகழ்ச்சியில் திமுக தெற்கு ஒன்றியச் செயலாளர் பொன்கணேசன், கூட்டமைப்பு தலைவர் மணிமொழியன், ஒன்றியக்குழுஉறுப்பினர்கள் நல்லதம்பி, சுமதிமுத்து, ஊராட்சிமன்றத் தலைவர் மலர்விழிகாளிதாஸ், திமுக கிளைச் செயலாளர் சக்திராஜன் உள்ளிட்ட கால்நடை மருத்துவர்கள் கலந்து கொண்டனர். முன்னதாக கால்நடை மருத்துவர் உதயபெருமாள் நிகழ்ச்சி ஏற்பாடு செய்திருந்தார்.

# குடிபோதையில் 16 வயது சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்த காங்கிரஸ் பிரமுகர் போக்சோவில் கைது



**திருவனந்தபுரம் பிப்.26-**

கேரள மாநிலம் கண்ணூரை சேர்ந்தவர் அஜீப் (வயது36). இவர் காங்கிரசின் இளைஞர் அணி பிரிவின் தலைவராக உள்ளார். இந்த நிலையில் அஜீப் தனது நணபர்களுடன் சேர்ந்து மது அருந்தி உள்ளார்.இதில்அஜீப்பின் நண்பர் அதிகமாக மது அருந்தியதால் மயங்கி விழுந்து உள்ளார். இதனால் தனது

நண்பரை வீட்டுக்கு கொண்டுசேர்ப்பதற்காக அஜீப் அவரது வீட்டுக்கு சென்றுள்ளார். மயக்கத்தில் இருந்த தனது நண்பரை ஒரு அறையில் படுக்க வைத்துவிட்டு அஜீப் வெளியே வந்து உள்ளார்.

அப்போது வீட்டில் தனியாக இருந்த ஒரு சிறுமியை அஜீப் பாலியல் வன்கொடுமை செய்துவிட்டு அங்கிருந்து தப்பி ஓடியுள்ளார். இந்த சம்பவம் தொடர்பாக சிறுமி தனது தந்தையிடம் தெரிவித்துள்ளார். அதனை அறிந்து அதிர்ச்சி அடைந்த அவர், கண்ணூர் போலீசாரிடம் புகார் அளித்துள்ளார்.

பின்னர் அஜீப் மீது போக்சோ வழக்குப்பதிவு செய்த போலீசார் தலைமறைவாக இருந்த அவரை கைது செய்து சிறையில் அடைத்தனர்.

# மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக கிடங்கில் ஆய்வு



தரங்கம்பாடி, பிப்- 26;

மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி தரங்கம்பாடி தாலுக்கா கிடாரங்கொண்டான் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகக்கிடங்கில் இருந்து தரங்கம்பாடி வட்டத்தில் உள்ள 90 நியாயவிலைகடைகளுக்கு அத்தியாவசியபொருட்கள் நகர்வு செய்யப்பட்டு வருகிறது. பிப்ரவரி மாதத்திற்கான நகர்வு பணி கடந்த 22.02.2022 அன்று நிறைவு பெற்றது. எதிர்வரும் மார்ச் மாதத்திற்கான நகர்வு பணிகள் கடந்த 23.02.2022 முதல் நடைபெற்று வருகிறது.

மேற்படி நகர்வு பணியினை மயிலாடுதுறை மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் கிருஷ்ணன் நுகர்பொருள் வாணிப கிடங்கில் ஆய்வுசெய்தார். ஆய்வின்போது அரிசியின் தரம் மற்றும் நியாயவிலை கடைகளுக்கு அனுப்பி வைக்கப்படும் அரிசி மூட்டைகளைஎடைகுறித்து ஆய்வுசெய்தார். அப்போது தரங்கம்பாடிவட்டவழங்கல் அலுவலர் பாபு, கிடங்கு உதவி தரக்கட்டுப்பாட்டு அலுவலர் ராகவன், வட்ட பொறியாளர் ஐயப்பன், கிடங்கு நகர்வு எழுத்தர்கள் பிரதீப், மணிகண்டன் மற்றும் வித்யாசாகர் ஆகியோர் உடன் இருந்தனர்.




Owned & Published by **S.Sivasakthivel**, Published From : Plot No. 1103, Periyar Nagar, Rajagopalapuram Post, Pudukkottai, and Printed By: **K.selvaraj** Printed at: Jayam Offset Printers, 5623, South 4th Street, Pudukkottai. Editor: **S.Sivasakthivel**. Phone:04322-261577.
**Chennai Office: Chief Reporter S.Kadar Hussain,** ISR MEDIA ONE, Old no:112, New no:235, 4th floor, Angappa Naicken Street, Parrys, Chennai-600 001. (Near GT Court Way). PH-9840728971. E-Mail:pudugaivaralaru@gmail.com, pudugaivaralaru2@gmail.com, pontimesrep@gmail.com

# உக்ரைன் உடன் பேச்சுவார்த்தைக்கு நாங்கள் தயார்





# இந்தியாவின் வேலைவாய்ப்புத் துறையின் முதுகெலும்பை உடைத்துவிட்டார்

# பங்குசந்தையில் முறைகேடு 6ம் தேதி வரை சிறை





சென்னை / புதுக்கோட்டை | 26.02.2022 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.5

புதுகை வரலாறு நாளிதழ்

புதுகை
# வரலாற்றில் இன்று



## பிறந்த நாள்



### கோபால் சுவரூப் பதக்

இந்தியாவின் 4வது குடியரசுத் துணைத் தலைவர்

(பி. 1896) (இ. 1982)

புதுகை வரலாற் நாளிதழ்

## நினைவு நாள்



### வினாயக் தாமோதர் சாவர்க்கர்

இந்தியக் கவிஞர், அரசியல்வாதி

(பி. 1883) (இ. 1966)

புதுகை

# வரலாறு

நாளிதழ்

## தமிழ்நாடு முழுவதும் தாலுக்காக்கள் மாவட்டங்கள் வாரியாக செய்தியாளர்கள்

# நியமிக்கப்படவுள்ளனர்

**கல்வித்தகுதி +2- தமிழில் எழுத்துப் பிழையின்றி எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும்**

**மாதம் ஒன்றுக்கு குறைந்தது ரூ.10 ஆயிரத்திற்கு விளம்பரங்கள் சேகரிக்க வேண்டும்**

## விண்ணப்பிக்க வேண்டிய முகவரி

ஆசிரியர் - புதுகை வரலாறு : நம்பர் 1103,
பெரியார் நகர், ராஜகோபாலபுரம் போஸ்ட், புதுக்கோட்டை-3.

**தொடர்புக்கு: 04322 261577**

**சம்பளம் தங்களின் உழைப்பை பொறுத்து வழங்கப்படும்**